# A WREATH

OF

# SACRED SONGS.

FIRST EDITION — 5,000 Copies.

# பேரின்ப மாலை.



MADRAS:

PRINTED FOR THE RELIGIOUS TRACT AND BOOK SOCIETY,

By H. W. Laurie, Christian Knowledge Society's Press.

No. 18, Church Street, Vepery.

1870.

**No. 117.** *Three Pie.* ௩ பை.

# இயேசு நாம கீர்த்தனம்.

இராகம், நாதநாமக்கிரியை. சாப்புத்தாளம்.

## பல்லவி.

சரணம் நம்பினேன், ஏசு நாதா!—இது,

## அனுபல்லவி.

தருணம் தருணம் முன்றன் கருணைகூர் வேதா!— சர.

## சரணங்கள்.

க.

நின்னருளாம் இங்கே வந்து,—என்றும்
நின்அடைக்கலமாக என்னையே தந்து,
முன்னாள் வினையைத் துறந்து,—ஆதி
மூலமே! உனக்கோலம், ஒலமே என்று,— சர.

உ.

சன்னதிமுன் தொண்டன் நின்றே,—என்றும்
தாயான கருணை உனக்குண் டென்றே,
சென்னிமேல் கரம் தூக்கி நின்றே,—உனைச்
சேவிக்கும் எளியேனைக் கோபிக்காய் என்றே,— சர.

ங.

அலைவாய்த் துரும்புபோல் வாடி,—உன
ததிகருணை வரச் செம் பாதத்தைத் தேடி,
தொலையாத வாழ்வை மன்றாடி,—அன்பின்
தோத்திர சங்கீர்த்தன கீதங்களைப் பாடி,— சர.

ச.

இனிய கருணை பொழி வேதா!—எனை
இருகரத்தால் அணை எம் கிறிஸ்து நாதா!
கனிவினையைத் தொலைத்த நீதா!—நசளைக்
கர்த்தாதி கர்த்தனே! உன் கருணையைத் தா, தா;—சர.

# SACRED SONGS.

# பேரின்ப மாலை.

## (க.) விக்கிரக வணக்கத்தையும், அவிசுவா சத்தையும் மறுத்தல்.

### வெண்பா.

சிந்தை தடுமாறி, தீவினைகட் குன்றாகி,
எந்தவிதப் புத்தியையும் எண்ணாமல்,—அந்தந்தோ!
மான் மயங்கா தாளும் ஒரு வல்ல பிதாஇருக்க,
ஏன் மயங்கி றாய்? மனமே!

இராகம், செஞ்சுருட்டி. ஆதிதாளம்.

### பல்லவி.

ஏன் மயங்கிறாய்? மனமே! ஏன் மயங்கிறாய்?—கான
மான் மயங்கிறாப்போல்—ஏன் மயங்கிறாய்?

### சரணங்கள்.

க.

அந்தர வான் புவி தந்த பராபரன்
ஆரென் றறிவால் அறியாமல்— ஏன்.

௨.

கல்லையும், செம்பையும், மரக் கட்டைகளையும்
கருதி, உருகி, தடுமாறி— என்.

௩.

பராபரனோ, பாகாலோ, தெய்வம்?
எனப் பகுத் தறிந் தேத்தாமல்— என்.

௪.

பராபரன் தெய்வம் ஆனால், அவனைப்
பணி, பசா சானால் அதைச் சேவி— என்.

௫.

மனுடவதாரஞ் செய்த பராபர
வஸ்துவே கிறிஸ்து என் றறியாமல்— என்.

௬.

எந்த விதத்திலும் ஏசுக் கிறிஸ்துவால்
இரட்சிப் படைவதைத் தேடாமல்— என்.

---

## (௨.) விக்கிரகபத்தியை நிக்கிரகிக்க நியாயம்.

---

### விருத்தம்.

மண்டலந் தன்னில் உள்ள மானிடப் பதரே! நீவீர்
பண்பெறான் வணக்கிவந்த பலவித உருக்கள் எல்லாம்
அண்டர்நா யகனுக்கோர அருவருப்பென்றே என்றுய்க்
கண்டறிந் துணர்ந்து பார்த்து, கதிவழி சேருவீரே.

இராகம், தசாவர்த்தி. ஆதிதாளம்.

### பல்லவி.

கண்டறிந் துணர்ந்து பாருங்கள்,—உமைப் படைத்த
கடவுள் அண்டையில் சேருங்கள்.

## அநுபல்லவி.

பண்டு நீர் வணங்கி வந்த பல பல தேவதைகள்,
படுத்திய ஆபத்தில் உமைக்
கெடுத்ததோ? ரட்சித்ததோ? அதை— கண்.

## சரணங்கள்.

க.

காத்தவராயன், கறுப்பண்ணன், கண்ணனூர் மாரியும்,
கல்லுக்கோட்டுச் சூரியும் வல்லத் தேகரி வீரியும்,
பார்த்திருக்கக் கொண்டுபோம் பற்பல காட் டேரியும்,
பங்கருளும் தெய்வமோ? என்
றுங்கள் புத்தியின் கண்ணாலே— கண்.

உ.

காசி, இம சேதுமட்டும் கால் கடுக்க ஓடியும்,
காவடி எடுத்துப் போய் கடம்பனைக் கொண்டாடியும்,
தாசிகளை ஆடச்சொல்லி சங்கரனைப் பாடியும்,
சற்றேனும் நன்மை தந்ததோ?
குற்றங் குறைகள் தீர்ந்ததோ?— கண்.

௩.

பிள்ளையாரைக் குட்டிக் கொண்டு, பெருமாள் கோவில் சுற்றி
பேயாடி போல் திரிந்து, பேச்சியைப் பிதற்றியும், [யும்,
வள்ளியைநத்திக்கொண்டோடும்மாயாண்டியைப்பற்றியும்,
வாழ்நாளை மாய்த்துக் கொள்ளாதேயும்;
வீணான தெய்வங்கள் இதாக்கும்— கண்.

௪.

கண்டகோவில் தெய்வம் என்று கை எடுத்துப் போற்றியும்,
களிமண்ணைச் சாணியையவைத்து, கர்த்தா என்று சாற்றியும்,
வண்டதுபோல் கத்தி கத்தி மலர்பறித்து தூற்றியும்,
வந்த பலன் ஏதேனும் உண்டோ?
சிந்தையும் இரும்புக் குண்டோ?— கண்.

௫.

பொங்கலிட் டாடுகள்வெட்டி, பூசைபோட்டுக் கண்டீரே,
போட்டியாகப் பெண்களைவைத் தாட்டிக் கோரணி கொண்டீரே,
சங்கை அற்ற சாஸ்திரச் சடங்கிலே துவண்டீரே,
சத்துருப் பிசாசு பண்ணும்
சற்பனை இதென்றே எண்ணும்— கண்.

௬.

இரண்டுநினை வாயிருந்து ரண்டகஞ் செய்யாதேயும்,
ஞாயம் இன்றி ஆத்துமத்தை நரகத்தில் சாய்க்காதேயும்,
பண்டது போல் குந்தி குந்தி நொண்டி நட வாதேயும்,
பராபரனை விட்டுவிட்டு
பாகாலைப் பணியாதேயும்— கண்.

## (௩.) ஆத்தும மகத்துவம்.

### விருத்தம்.

அருள்ஆழி வேந்தனது சாயல் கொண்டங்
கசுத்தமிலா தே இருந்த தன்மை மாறி,
மருளாலே தாழ்ச்சிஅடைந் தாலும் நித்ய
மகிமைஉறக் கிருபையினால் வகையும் பெற்று,

தெருளான புத்திசித்தம் வெறுப்பு வப்புச்
சேர்ந்த சத்தி யோடுடலுள் வசிக்கும் முக்ய,
பொருளான தொன்றுண்டக் கதனை ஆய்ந்து
போற்றுவீர்; அதற்குறுதி ஆற்றுவீரே.

இராகம், தனாசரி. அடந்தைதாளம்.

## பல்லவி.

பொருள் ஒன்றுண் டிக மீது,—அதை மதிக்க
புவியும் விலை பெறாது.

## அனுபல்லவி.

தரிசன ரூபின்றி தத்துவ ஞானத்தி னோடு
சடமே வீடாய்க் கொண்டு சஞ்சரிக்கும் ப்ரதான,—பொ.

## சரணங்கள்.

### ௧.

அதுகெட விடில்தீது,—திரும்ப மீட்க
அதற்குப் பின் வகை ஏது?
நிதியும் எதிர் நில்லாது,—எரிநரகில்
நித்ய மாய் உறும் போது;
இதுவே அதிடேற, ஏற்ற சமயம் என்று
எவருங் கணிசமாக, எண்ணத்தகும் மேலான,— பொ.

### ௨.

கலை ஞானம் மறந் தோரும்,—அதைத் திரும்ப
கற்றிட வரும் பாரும்;
உலை வுறத் தனம் யாரும்,—இழக்கில் நல்ல
உழைப்பினால் அது சேரும்;
நிலை குலைய விடில், நிகழ்த்தெம் முயற்சியாலும்
நித்யமாய் உறுங்கேட்டினின்று மீட்கவேலாத,— பொ.

௩.

உறு நண்பர் தொடர் பேனும்,—சரீரம் அதில்
உள்ள சவுக்கியந் தானும்;
முறுகிய உடல் ஊனும்,—விலகில் அவை
மூண்டு திரும்பும் வானும்,
மறுதலித் தேமாளும் வன்னெஞ்சரே! ஐயையோ,
வான்கதி தனைத் தேடும் வாழ்நாள் உள்ள இப்போதே,—
பொ.

## (௪.) பாவிகள் மனந்திரும்பும்படி தேவன் அழைத்தல்.

### வெண்பா.

பாவச் சுமைசுமந்து, பாரத்தால் சோர்பவரே!
ஆவலுடனே வாரும் ஆதரிப்பேன்;—சாவாமல்,
ஆற்றுவேன்; போற்றி, அடிவேன், அவக்குணங்கள்;
எற்றுவேன், விண் நிலத்திலே.

இராகம், காம்போதி. ஆதிதாளம்.

### பல்லவி.

உலகில் பவப் பாரத்தால் சோரும்—இளைப்
பூர்ந்த நரரே வந்து சேரும்.

### அனுபல்லவி.

அலசடி பட்டவரே! வாரும்;—என்றன்
ஆறுதலால் அவற்றைத் தீரும்;—பொல்லா— உலகில்.

## சரணங்கள்.

க.

பாவிஎன் றெண்ணித் திகைப்போரும்,—எந்தன்
பாவம் தீராதென் றிருப்போரும்,
ஆவலாய் ஓடிவந்து, சேரும்;—நான்
அவர்கட்காய் வந்ததைப் பாரும்;—பொல்லா— உலகில்.

உ.

மாறுதல் எம்மனதில் இல்லாமல்,—செட்ட
ம்மாயம் இருக்கிற தல்லாமல்,
ஆறுதலை உறச் செல்லாமல்,—நின்
றலைவேனு? என்பரே! நில்லாமல்;—பொல்லா— உலகில்.

ங.

காலம் கடந்த கிழவோரே!—வீணாய்க்
காலம் கழித்தே, உழல்னோரே!
காலமே தேட மறந்தோரே!—உங்கள்
கவலையைத் தீர்ப்பேன்; அறிவீரே;—பொல்லா— உலகில்.

ச.

வாலிபப் பிராயமிதில் நாளும்,—இன்ப
வாழ்வு சுகிக்க வென்று மாளும்,
சிலரே! இன்றென் னுரை கேளும்;—அவை
சேர்க்கும் நரகத்தில் எந்நாளும்;—பொல்லா— உலகில்.

ரு.

இளமை என்றே எண்ணி, நில்லாதே,—சாவும்
இளமை என்று சொல்லிச், செல்லாதே;
வளமாய் வருதலைத் தள்ளாதே;—கெட்ட
வழக்க மதையே கைக்கொள்ளாதே;-பொல்லா—உலகில்.

# (ரு.) மனிதர்களுடைய ஜன்ம கன்ம பாவ நிலைமை.

---

### வெ ண் பா.

சென்மத்தினாலும் என்றன் செய்கையினாலும் புவியில்,
நன்மை அற்ற பாதகன் யான் ஆனேனே!—வன்மை உள்ள
தேவா! எனைச்சூழ்ந்து தீராதிருக்கும், மிகு
பாவப் பிணி அகற்றப் பார்.

இராகம், பிலஹரி. செம்படைதாளம்.

### ப ல் ல வி.

பாவப்பிணி அகல சீவ மருந்தியுமேன்.

### அ னு ப ல் ல வி.

சாவின் கூரை ஒடித்த சிவநாதா! பர்த்தாவே!— பாவ.

### ச ர ண ங் க ள்.

க.

அன்னை வயிற்றிலே உற்றிந்நாள் வரையிலும் நான்
தின்மை தனக்கல்லால் வே றென்ன நன்மைக்காள் ஆனேன்;
—பாவ.

உ.

ஜன்ம பாவத்தோடு கன்மப் பாவமுங் கூடி,
நின்னை அடையாப் படிக் கென்னை அகற்றிடவே;— பாவ.

ங.

தீயோன் எனைத் தனது மாய வலை வீசி, உன்
தூய நெறி சேராமல், ஓயா திருப்பதினால்,— பாவ.

ச.

ஞான வரங்கள்முத லான நன்மைகளைத் தி
தான வைகள் என் றெண்ணி, யானே அழிவுறாமல்,—பாவ.

௬.

சுத்திபெற்றும் பன்றிம லத்தில் அலைவதுபோல்,
முத்திதனைக் கைவிட்ட சுத்தத்தில் யான் உருமல்,— பாவ.

௭.

சுக்கும் மலம் அருந்தும், அக்கன் தனைப்போல் யானும்,
அக்கிரமத்தை இனி முக்கியம் என் றெண்ணுமல்,—பாவ.

## (௬.) இரட்சிப்பின் தூது.

இராகம், ஆனந்தபைரவி. சாப்புதாளம்.

பல்லவி.

இந்நாள் ரட்சிப்புக்கேற்ற நல் நாள்;
ஏற்ற நல் நாள்; ஏற்ற நல் நாள்.

அனுபல்லவி.

சொன்னார் கிறிஸ்துனக்குக் கிருபையைச் சொரிந்து,—இந்.

சரணங்கள்.

க.

பாடுபட்ட கிறிஸ்தைப் பாரு;—உந்தன்
பாவங்கள் நீங்க அவர் உதிரத்தைச் சேரு;— இந்.

உ.

இன்றுன் ரட்சகரிடம் திரும்பு;—அவர்
இயற்றுஞ் சம்பூரணச் சேவை விரும்பு;— இந்.

ங.

பொய்யான மாயைதனை நம்பி,—வரும்
பூரண கிருபையைப் போக்கடியாதே வெம்பி,— இங்.

ச

முன்னும் அநேகமுறை சொன்னேன்;—முழு
மோசமாய் போகாதே, இப்போதும் சொன்னேன்;— இங்.

ரு.

வீணாக என் துக்கப் பட்டாய்?—அது
மெய்தான், இதற்குமுன் பவஞ்செய்து கெட்டாய்,— இங்.

## (எ.) கிறிஸ்துவின் வருகை.

### கொச்சகம்.

தன்னரன் மனைதுறந்தான், தந்தைவாழ்வையும் மறந்தான்,
முன்னணை தனில்பிறந்தான், மூவுலகமும் நிறைந்தான்,
மன்னுயிர்க் கருள்சொறிந்தான், வானநாட்டில் சிறந்தான்,
தன்னையே தந்தான் நந்தா தற்பராபரன் வந்தானே.

இராகம், செஞ்சுருட்டி. ஆதிதாளம்.

### கண்ணிகள்.

க.

மன்னுயிர்க்காக தன்னுயிர் விடுக்க
வல்ல பராபரன் வந்தார், வந்தார்.— பாவி.

உ.

இங்கிலம் புரக்க, உன்னதத் திருந்தே
ஏக பராபரன் வந்தார், வந்தார்.— பாவி.

௩.

வானவர் பணியுஞ் சேனையின் கருத்தர்
மகிமைப் பராபரன் வந்தார், வந்தார்.— பாவி.

௪.

நித்ய பிதாவின் நேய குமாரன்
நேமி அனைத்தும் வாழ வந்தார், வந்தார்.— பாவி.

௫.

தந்தைப் பிரானார் விந்தைக் குமாரன்
சச்சிதானந்த குரு வந்தார், வந்தார்.— பாவி.

௬.

மெய்யான தேவன், மெய்யான மனுடன்,
மேசியா, ஏசையா வந்தார், வந்தார்.— பாவி.

௭.

தீவினை நாசர், பாவிகள் நேசர்,
தேவ கிறிஸ்தையா வந்தார், வந்தார்.— பாவி.

௮.

செய அனுகூலர், திவ்விய பாலர்,
திரு மனுவேலரே வந்தார், வந்தார்.— பாவி.

௯.

ஆசைக் கண்ணாளர், ஆத்தும நாதர்,
அருமை மணாளர் வந்தார், வந்தார்.— பாவி.

## (அ.) ஏசுக்கிறிஸ்தின் திவ்விய குணம் பாரும்.

---

### வெண்பா.

மாணிக்க முத்தை வகையறுப்பீர்; மண்ணிலெடுத்
தாணிப் பொன்னென்றும் அறிவிப்பீர்;—ஞானிகளே!
ஏசுக்கிறிஸ்தின் இணையில் குணம் பாரும்,
தேசற்ற ரட்சகர் தேரும்.

இராகம், கமாசு. ஆதிதாளம்.

### பல்லவி.

ஏசுக்கிறிஸ்தின் திவ்விய குணம் பாரும்,
இவரே ரட்சகர் தேரும்.

### அனுபல்லவி.

தேசுயர் திரித்துவ தேவனின் மகத்துவ, ரீ-ரீ-ரீ-ரீ
திவ்விய அடிகளிற் தொவ்விய படிபணிர்— தேசு.

### சரணங்கள்.

க.

உலகினில் இவர்நிகர் ஒருவரும் இலர்நலர்-பாரும்,தேரும்;
ஒருபொழு தெனும்பவம் புரிந்திலர் இதனை நன்கோரும்;
மலைவென உளதிவர் மனுஷன்மாத்திரம் அலர், ரீ-ரீ-ரீ-ரீ
மாசில்லாத பரன் மாமிச மான திரு— ஏசு.

உ.

[வாய்;
ஒருவரே பரன் இருதயத்தினால் அவரை நீ-பணிவாய், தணி
உள்ளத்தினால்முழுப்பெலனால்அவர்மேல்அன்புகனிவாய்;
உன்னைப்போல்உன்பிறனைஉரித்தில்நேசிப்பாய்என,ரீ-ரீ-ரீ-ரீ
உறுத்திப் போதித்த உயர் குருவாகிய— ஏசு.

௩.

குருடர்செவிடர்பல வருட முடவர் மூகர்-நாடின,தேடின;
குருஅவர்; அவர்தொடக் கொடிய ரோகங்களும் ஓடின;
ஒருமொழி அவர்சொல உயிர்த்தனர் மரித்தவர், ரீ-ரீ-ரீ-ரீ
ஒருங்குடன் உவமைசெய உலகினில் இவர் எவர்— ஏசு.

௪. [மரணமும்;
இவர்க்கடர்காவிலும் சிலுவைதனிலும் வந்த—துயரமும்,
இகத்துப் பாவிகட்காய் எமக்காய் இறங்கினதே வாக்கினே;
இவர்சுத்தர்இவர்சுத்தர் இவர்கர்த்தர் இவர்கர்த்தர், ரீ-ரீ-ரீ-ரீ
இனப்பாவ நரர்க்காகச் சிவன் தந்தார்— ஏசு.

௫. [கர்த்தனே, அர்த்தனே,
கல்லறையினின்று மூன்றும் நாளினில் உயிர்த்தெழுந்த-
கருணையாய்ச் சிஷருக்குக் காட்சியளித்த பரிசுத்தனே,
வல்லமையி னோடுபர மண்டலத்துக் கெழுந்தவர், ரீ-ரீ-ரீ-ரீ
வானின் றுலகை நியாயந் தீர்க்கவும் வருபவர்— ஏசு.

௬. [சகாயன்;
தம்மிடம் வரும் எவரையும் ஒருக்காலுந் தள்ளாத-நேயன்,
தஞ்சம்அடைபவருக் கஞ்சல்அபயம்சொல் வாயன்;
தம்மிடம் வரும்படி உம்மையும் அழைக்கிறார், ரீ-ரீ-ரீ-ரீ
தாமதஞ்செய்யாதேயும், தருணம் இதுவறியும்— ஏசு.

## (௯.) இன்றைக்கே மனந்திரும்பு.

பல்லவி.

இன்றைக்கே மனந் திரும்புவாய்
இல்லையானால் கெடுவாய்.

அனுபல்லவி.

பின்னுக்கென்று நீ பின்னிடுவது
பிசாசின் தந்திரப் பேச்சென்றே நினை.—இன்றை.

சரணங்கள்.

௧.

நீதிவெட்டக்கை யோங்குதே
நீடிய சாந்தமோ தாங்குதே,
மாதயவோடு ஏசு ரட்சகர்
வருந்திப் பாவிகளை அழைக்கிறார்.— இன்றை.

௨.

நாளைப் பிழைப்ப தசாத்தியம்
நரகப் பாடின் சம் பாத்தியம்;
வேளை யிதுவே பரிசுத்தாவியும்
வெகுவாய்த் தூண்டபின் செய்யாதே.—இன்றை.

௩.

அந்தியகாலம் பார்க்கலாம்
அதுவரை தனஞ் சேர்க்கலாம்;
முந்திப்போகாதெனச் சிந்தைகொள்வது
மோசடியாய் முடியும், முடியும்.— இன்றை.

## (௰.) கிறிஸ்து உனக்காக மரித்ததைப் பார்.

பல்லவி.

மரித்தாரே கிறிஸ்தேசு
உனக்காகப் பாவி.

### சரணங்கள்.

௧.

திரித்துவத் துதித்தோர், தெய்வீக சேயே
தீனதயாளத்வ மனுவேலே பாராய்— மரி.

௨.

லோகத்தின் பாவத்தை தேகத்தில் சுமந்தே
லோலாயமாய் சிலுவையிலே பாராய்— மரி.

௩.

மகத்தான தண்டனை நிவர்த்திப்பதற்கே
மாபாடு பட்டுத் தரித்தே பாராய்— மரி.

௪.

மன்னிப் புண்டாக்கவே மத்திஸ்தராக
வாதனைக் குள்ளானர் தாமே நீ பாராய்— மரி.

---

## (௰௧.) கிறிஸ்துவினுல் வந்த இரட்சிப்பு.

---

### வெண்பா.

கூடா தென்றாலும், குருசில் அறையுண்டு,
பாடாய் மரித்தடக்கப் பட்டுமே,—ஈடாகி,
எப்படியும் பாவிகளை ஒப்புரவாக்கிக் கொளவே,
அற்புதன் வந்தார்; இதறிமின்.

இராகம், காம்போதி. ஆதிதாளம்.

### பல்லவி.

எப்படியும் பாவிகளை ஒப்புர வாக்கிக் கொள்வதற்
கிப்புவியிலே உதித்தார்; அற்புதந்தானே.

### அனுபல்லவி.

மெய்ப்பரம் புவியுக் தந்த தற்பரன் அனாதி பிதா
நற்புதல்வ னான ஏசு நாத கிருபாகரனார்.— எப்.

### சரணங்கள்.

௧.

மட்டிலாப் பொருள். அனைத்தும் திட்டமாகவே படைத்து
இட்டமாய் அனுக்கிரகித்த சிஷ்டிகன்தானே,
கட்டளையிட்ட கற்பனை விட்டொரு சர்ப்பத்தின் வாயில்
பட்டுநரகத்துக்காளாய்க் கெட்டழிந்தபேர்என்றாலும்-எப்.

௨.

அச்சயன்மோசேயைக்கொண்டன்றெச்சரித்தெழுதித்தந்த
உச்சித கற்பனைகடந் திச்சையினாலே,
துர்ச்சனப் பசாசைக்கூடி, மிச்சமாய் பாவங்கள் செய்து,
நிச்சயங்கெட்டுப்போனார்கள்;ரட்சிக்கக்கூடாதென்றாலும்.
—எப்.

௩.

நாற்றிசை உலகம் எங்கும் ஏத்திய மானிடர் எல்லாம்
வேற்றுமைப் பசாசின் கையில் ஆத்துமத்தையே,
தோற்றனந்தா னந்தகாலம் தேற்றுதல் அற்றேகிடந்து,
சாற்றருந் தயாபரர்க்கு மாற்றலர் ஆனார் என்றாலும்.—எப்.

௪.

தாக்கிய பராபரன் உண் டாக்கிய அனந்த செல்வப்
பாக்கியங்கள் அனைத்தையும் போக்கடித்துமே,
யோக்கியம் தெய்வபுத்ர சிலாக்கியம் எல்லாம் இழந்து,
பேய்க்கடிமைஆட்கள்கேட்டைநீக்குதற்கேலாதென்றாலும்.
—எப்.

௫.

புத்தியதெல்லா மயங்கி, முற்றிலும் இருளடைந்து
சத்துருவான சாத்தானின் கொத்தடிமையாய்,
நித்திய வாதைக்குள் நிரயத்தில் விழுவோர்க்குக்கூட
ரத்தத்தைச் சிந்திஆனாலும், செத்துயிர் விடுத்தென்றாலும்.-
எப்.

௬.

மேட்டிமை எல்லாந் துறந்து காட்டுக்குள் இருக்கும் அந்த
மாட்டுக்கொட்டி லில்பிறந்தோர் ஆட்டுக்குட்டிபோல்,
பாட்டுக் கிடமாய் உலகை மீட்டுக்கொண்ட னந்தமோட்ச
வீட்டுக்குள் படுத்தவெல்லை நாட்டுக்குள் மரித்துயிர்த்து.—

எப்.

## (௰உ.) மனிதன் தன் பாவநிலைமையை உணர்ந்தது.

### விருத்தம்.

ஜென்மத்தால் நாதா வுந்தன் திருவுளத் துரோகி யானேன்;
கன்மத்தாலோ அசங்கிய கடைகெட்ட பாவி யானேன்;
தன்மத்தை நாடாத்தோஷி தனையழியா திப்போதே
உன்மன திரங்கி யென்மேல் உருகிஆள் கொள்ளுவாயே.

இராகம், நீலாம்புரி. ஆதிதாளம்.

### திபதை.—கண்ணிகள்.

௧.

ஐயோ, நான் ஒரு பாவ ஜென்மி ஆனேனே;
ஆண்டு ரட்சித்தருளாய்;—பரப்பொருளே!
உய்யும்படி, தெய்வமே! உனையல்லால் எனக்கோர்
ஒதுங்கிடமுண்டோ, வேறே;—பரப்பொருளே!

௨.

ஆதித்தந்தைதாய் செய்த பாதகம் உலகத்தை
அடங்கலும் பிடித்ததே;—பரப்பொருளே!
மாதா வயிற்றிலே நான் தோஷியாய் உருவாகி,
மறங்கொண்டு பிறந்தேனே;—பரப்பொருளே!

௩.

நல்ல வரமாய்ப் பெற்ற நீதி, சுசி, பாக்கியம்,
ஞானம் எல்லாம் இழந்து,—பரப்பொருளே!
சொல்ல வெட்கம்ஆம் அநீதி, சுசிகேடு, நிற்பாக்கியம்,
துற்புத்தியும் அடைந்தேன்;—பரப்பொருளே!

௪.

மாட்சிஉறும் சிங்கார வனமாம் என துளத்தை
மங்கு காடாக்கினேனே;—பரப்பொருளே!
ஆட்சிகொளும் உன்சுத்த ஆலயமாம் என்நெஞ்சை
அலகைக்கிடம் ஆக்கினேன்;—பரப்பொருளே!

௫.

உன்னைமுழுப் பலத்தால் நேசியாமலே நெஞ்சம்
உரங்கொண்ட பாவியானேன்;—பரப்பொருளே!
என்னை நிகராக என்பிறனை நேசியாமல் நான்
இகலுற்றிருந்தேன் ஐயா!—பரப்பொருளே!

௬.

செய்கிரியை நோக்கில் உன்திருவடி சேர வகை
தேடினுங் காண்கிலேனே;—பரப்பொருளே!
பொய், வஞ்சனை, திருட்டும், புரட்டும், உருட்டும், பல
பொல்லாங்கு செய்தோஷியான்;—பரப்பொருளே!

௭.

எங்கே நான் ஓடுவேன், பாதகனுனேன் ஐயா!
என்னையும் இடேற்றவே;—பரப்பொருளே!
பங்கமுறக் கொடிய பாடுற்றிறந்துயிர்த்து,
பரத்தில் எழுந்தனையே;—பரப்பொருளே!

௮.

துப்பரவாம் சுத்தக் கண்ணனே! உன்முன் இன்னும்
துணிகரமாய் நடந்து;—பரப்பொருளே!
இப்படி ஜென்மகன்ம பாவத்தால் கேடடைந்த
ஏழைப் பாவிக் கிரங்காய்;—பரப்பொருளே!